## April 17, 2026 – தினமணி செய்தித்தாள் – சிறு துணுக்கள்

1. ஆஸ்திரேலியாவில் நாளொன்றுக்கு 1.2 லட்சம் பீப்பாய்களைக் கையாளும் திறன் கொண்ட மிகப் பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

(i) மெல்போர்ன் அருகே அமைந்துள்ள, 'விவா எனர்ஜி' நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த ஆலையில் புதன்கிழமை இரவு பற்றிய தீ, வியாழக்கிழமை நண்பகல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

(ii) விக்டோரியா மாகாணத்தின் பாதிக்கும் மேற்பட்ட எரிபொருள் தேவையை பூர்த்தி செய்யும் இந்த ஆலையில் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வரும் நாள்களில் எரிபொருள்களின் விலை கணிசமாக உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

(iii) ஆஸ்திரேலியா தனது எரிபொருள் தேவையில் 80 சதவீதத்தை இறக்குமதி மூலமே பூர்த்தி செய்து வருகிறது. மத்திய கிழக்கு போர் காரணமாக விநியோகம் ஏற்கெனவே சீர்குலைந்துள்ள நிலையில், இந்தத் தீவிபத்து அந்நாட்டின் எரிபொருள் பாதுகாப்புக்குப் புதிய சவாலை ஏற்படுத்தியுள்ளது.

2. நடப்பாண்டு பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டிக்கான மொத்த பரிசுத் தொகை ரூ.670 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 10 சதவீதம் அதிகமாகும்.

(i) டென்னிஸ் காலண்டரில் நடைபெறும் 2-ஆவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபன், பிரான்ஸின் பாரீஸ் நகரில் களிமண் களத்தில் விளையாடப்படுகிறது. இந்த ஆண்டு போட்டி மே 24-ஆம் தேதி தொடங்கவுள்ளது.

(ii) இந்நிலையில், போட்டி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, இந்த ஆண்டுக்கான மொத்த பரிசுத் தொகை ரூ.670 கோடியாக உள்ளது. ஆடவர், மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வெல்வோருக்கு பரிசுத் தொகையாக தலா ரூ.30.71 கோடி கிடைக்கவுள்ளது. இரண்டிலும் ரன்னர் அப் இடத்தைப் பிடிப்போர் தலா ரூ.15.35 கோடி பெறவுள்ளனர்.

(iii) அரையிறுதி வரை வருவோருக்கு ரூ.8.22 கோடி வழங்கப்படும் நிலையில், முதல் சுற்றுடன் வெளியேறுவோர் ரூ.95 லட்சம் பெறுவர். ஆடவர், மகளிர் இரட்டையர் பிரிவில் வாகை சூடுவோர் தலா ரூ.6.58 கோடியும், கலப்பு இரட்டையரில் பட்டம் வெல்வோருக்கு ரூ.1.33 கோடியும் கிடைக்கவுள்ளது.

(iv) இந்த ஆண்டு போட்டியில் முதல்முறையாக, வீரர், வீராங்கனைகள் தங்களின் உடல்திறன் தொடர்பான தகவல்களை சேகரிக்கும் கருவிகளை அணிந்துகொண்டு விளையாட போட்டி நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அத்துடன் போட்டியாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப, கேமரா கண்காணிப்பு இல்லாத வகையில் அவர்களின் தனியுரிமையை அங்கீகரிக்கும் இடங்களும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(v) இப்போட்டியில், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், அமெரிக்காவின் கோகோ கௌஃப்

ஆகியோர் நடப்பு சாம்பியன்களாக உள்ளனர்.

3. கட்டாய மத மாற்றத்தை பயங்கரவாத செயலாக அறிவிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

(i) மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள டிசிஎஸ் நிறுவனத்தின் அலுவலகத்தில் கட்டாய மத மாற்றம் மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப் பட்டதாக அங்கு பணியாற்றும் 8 பெண்கள் குற்றஞ்சாட்டிய நிலையில், இந்த மனுவை வழக்குரைஞர் அஸ்வினிகுமார் உபாத்யாய தாக்கல் செய்தார்.

(ii) அதில் கூறப்பட்டிருப்பதாவது:

- நாசிக்கில் நிகழ்ந்த கட்டாய மத மாற்ற சம்பவத்தால் நாட்டு மக்கள் அதிர்ச்சியடைந் துள்ளனர்.
- கட்டாய மத மாற்றமானது இறையாண்மை, மதச்சார்பின்மை, ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்துக்கு மட்டுமின்றி சகோதரத்துவம், கண்ணியம், ஒற்றுமை மற்றும் தேச ஒருங்கிணைப்புக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியது.
- குழுவாக, மிகவும் முறைப்படுத்தப்பட்ட நடைமுறைகளின்கீழ் கட்டாய மத மாற்றங்கள் செய்யப்படுவது பாரத நியாய சம்ஹிதா சட்டம், 2023 பிரிவு 113-இன் கீழ் 'பயங்கரவாத செயல்' என்ற வரையறையில் கொண்டுவரப்படுகிறது.
- கட்டாய மத மாற்றத்தை மேற்கொள்ள வெளிநாடுகளில் இருந்து நிதி அளிக்கப்பட்டு நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதால் இது பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1967-இன் கீழும் பயங்கரவாத செயலாகவே கருதப்படுகிறது.
- அரசமைப்புச் சட்டத்தின் சட்டப்பி ரிவு 25-இன்கீழ் ஒரு மதத்தை சுதந்திரமாக பின்பற்ற உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஆனால் அதை தவறாக பயன்படுத்தி கட்டாய மத மாற்றத்தில் சிலர் ஈடுபடுகின்றனர். எனவே, கட்டாய மத மாற்றத்தை பயங்கரவாத செயலாக அறிவித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(iii) மத்திய மற்றும் மாநில அரசுகள் இதை கட்டுப்படுத்த சிறப்பு நீதிமன்றங்களை ஏற்படுத்தி தண்டனைகள் வழங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

4. கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 500 மெகாவாட் மின்னுற்பத்தி திறன் கொண்ட முன்மாதிரி வேக ஈனுலை, மின் உற்பத்திக்கான அணுப்பிளவு செயல்பாட்டில் முதல் நிலையை எட்டியது மைல்கல் என மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

(i) கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் 500 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட முன்மாதிரி வேகஈனுலை கடந்த ஏப்.6-ஆம் தேதி இரவு 8:25 மணிக்கு முதலாவது அணுப்பிளவு செயல்பாட்டு நிலையை எட்டியது. இது அணுமின் உற்பத்தியின் முதல் நிலை.

(ii) நீண்டகால எரிசக்திப் பாதுகாப்பை வழங்குவதிலும், உள்நாட்டு அணுமின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதிலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க செயல் முறை. அணுமின் சக்தி

திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகவே இது பார்க்கப்படுகிறது.

(iii) இதன் முக்கியத்துவம் குறித்து மாநிலங்களவை யில்சி.பி.ராதாகிருஷ்ணன் பேசியதாவது: ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழிற் சாலைகள் மற்றும் மத்திய அணுமின் துறையின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுபவர்களின் கூட்டு முயற்சியால் கல்பாக்கத்தில் பெரும் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இது நமது நாட்டின் முக்கிய மைல்கல்லாகும்.

(iv) இந்தச் சாதனையால் இந்தியாவின் மூன்று கட்ட அணுசக்தித் திட்டத்தில் அணு உலையில் புளூட்டோனியம் பயன்படுத்தும் இரண்டாம் கட்டத்தை நோக்கி நாம் நகர்ந்திருக்கிறோம். மூன்றாம் கட்டத்தில் தோரியம் யுரேனியம் பயன்படுத்தப்படவுள்ளது.

(v) முன்மாதிரி வேக ஈனுலையை இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையம் மற்றும் பாவினி இணைந்து உருவாக்கியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி 2024–ஆம் ஆண்டு முன் மாதிரி வேக ஈனுலையை நேரில் சென்று பார்வையிட்டார்.

(vi) 2070– கரியமில வாயு உமிழ்வை பூஜ்ஜியமாக்கும் இந்தியாவின் இலக்கு மற்றும் 100 ஜிகாவாட் அணுசக்தி உற்பத்தி இலக்கை அடைவதிலும் இந்தச் சாதனை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

5. மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் 106–ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம், 2023 அமலுக்கு வந்ததாக மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

(i) இந்தச் சட்டத்தை 2029–இல் அமல்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தில் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு விவாதம் தொடங்கிய நிலையில், 2026, ஏப்.16–ஆம் தேதி முதல் அமலுக்கு வந்ததாக அறிவிக்கை வெளியிடப்பட்டது ஏன் என்ற குழப்பம் எழுந்துள்ளது.

(ii) இதுதொடர்பாக மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், சட்ட நடைமுறையின்படி இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டது என்றார். விரிவான விளக்கத்தை அவர் அளிக்கவில்லை. காங்கிரஸ் பொதுச் செயலர் ஜெய்ராம் ரமேஷ் இதுகுறித்து கூறுகையில், மகளிர் இடஒதுக் கீடு சட்டம் 2023 செப்டம்பரில் நிறைவேற்றப்பட்ட நிலையில், இப்போது அமலுக்கு வந்துள்ளதாக அறிவிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. இதுதொடர்பான சட்டத் திருத்தங்கள் மீது வெள்ளிக்கிழமை வாக்கெடுப்பு நடைபெறவுள்ள நிலையில், இந்த அறிவிக்கை வெளியிடப்பட்டிருப்பது விசித்திரமாக உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

6. எந்தப் பிரச்னைக்கும் போர் தீர்வாகாது; உக்ரைன் மற்றும் மேற்காசிய போர்களுக்கு அமைதி வழியில் தீர்வு காணப்பட வேண்டும்' என்று பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை தெரிவித்தார். தில்லியில் ஆஸ்திரிய பிரதமர் கிறிஸ்டியன் ஸ்டாக்கர் உடனான சந்திப்புக்குப் பின் அவர் இவ்வாறு கூறினார்.

(i) இந்தியா–ஆஸ்திரியா உறவுகளை வலுப்படுத்துவதுடன், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை விரிவாக்கும் நோக்கில் 4 நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு கடந்த

செவ்வாய்க்கிழமை வந்தார் கிறிஸ்டியன் ஸ்டாக்கர். இந்தியாவுக்கான அவரது முதல் அரசுமுறைப் பயணம் இதுவா கும்.

(ii) தில்லியில் பிரதமர் மோடியை சந்தித்த அவர், இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். பரஸ்பர உறவுகள் மட்டுமன்றி மேற்காசியா, உக்ரைன் போர்களின் தாக்கங்கள் குறித்தும் இருவரும் விரிவாக ஆலோசித்தனர்.

(iii) 6 ஒப்பந்தங்கள் கையொப்பம்:

- இந்தப் பேச்சுவார்த்தை தொடர்ந்து, முதலீடு ஊக்குவிப்பு, பாதுகாப்பு விவகாரங்கள், பயங்கரவாத எதிர்ப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான 6 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. பின்னர், செய்தியாளர்களுக்கு கூட்டாக அளித்த பேட்டியில், பிரதமர் மோடி பேசியதாவது: காலகட்டத்தில், இன்றைய ஒட்டுமொத்த உலகமும் மிகத் தீவிரமான, பதற்றமான சூழ்நிலையின் ஊடாக பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பதற்றத்தின் தாக்கத்தை நாம் அனைவரும் உணர்ந்து வருகிறோம்.

7. மக்களவை–பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு அமலாக்கம் மற்றும் மக்களவைத் தொகுதிகள் அதிகரிப்புக்கு வகை செய்யும் அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை அவசியம்.

(i) அதாவது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் தேவை; அதுமட்டுமன்றி, அவையில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்றில் இருபங்கு வாக்குகளையும் பெற வேண்டும். இந்த இரண்டாவது நிபந்தனைக்கு தேவையான பலம், ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியிடம் இல்லை.

(ii) மசோதாவை நிறைவேற்ற வேண்டுமெனில், எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற வேண்டும், இல்லையெனில் சில முக்கிய எதிர்க்கட்சிகளை வாக்கெடுப்பைத் தவிர்க்கும்படி செய்ய வேண்டும். இந்தக் காரணங்களால், மகளிர் இடஒதுக்கீடு அமலாக்க மசோதா நிறைவேறுமா என்பதில் பெரிய கேள்வி நிலவுகிறது.

(iii) மக்களவையில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பலம் 293 (பாஜக மட்டும் 240). எதிரணியில் 233 உறுப்பினர்கள் உள்ளனர். இதுதவிர 7 சுயேச்சை எம்.பி.க்களும், இரு அணிகளிலும் இடம்பெறாத ஒய்எஸ்ஆர் காங்கிரஸுக்கு 4 உறுப்பினர்களும், அகில இந்திய மஜ்லிஸ், சிரோமணி அகாலி தளம் கட்சிக்கு தலா ஒரு உறுப்பினரும் உள்ளனர்.

(iv) ஆளும் தரப்புக்கான வாய்ப்பு என்ன?:

- மொத்தமுள்ள 540 உறுப்பினர்களும் அவையில் பங்கேற்றால், மூன்றில் இருபங்கு ஆதரவைப் பெற 360 வாக்குகள் தேவை. அதேநேரம், 30 உறுப்பினர்கள் அவையில் பங்கேற்காவிட்டால் 340 வாக்குகளும், 60 உறுப்பினர்கள் பங்கேற்காவிட்டால் 320 வாக்குகளும், 90 உறுப்பினர்கள் பங்கேற்காவிட்டால் 300 வாக்குகளும் போதுமானது.
- காங்கிரஸுக்கு 98 உறுப்பினர்கள் உள்ள நிலையில், சமாஜவாதிக்கு 37, திரிணமூல் காங்கிரஸுக்கு 28, திமுகவுக்கு 22 உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, சமாஜவாதி,

திரிணமூல் காங்கிரஸ் ஆகிய இரு எதிர்க்கட்சிகளையும் வாக்கெடுப்பை புறக்கணிக்கச் செய்வது மத்திய அரசுக்கு ஒரு வாய்ப்பாகும். எதிர்தரப்பைச் சேர்ந்த வேறு கட்சிகளும் வாக்கெடுப்பை புறக்கணித்தால், அது பாஜகவுக்கு சாதகமாக அமையும்.

- மாநிலங்களவையைப் பொருத்தவரை, தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 141 உறுப்பினர்களும் (பாஜக மட்டும் 107), எதிரணிக்கு 83 உறுப்பினர்களும் உள்ளனர். இரு அணிகளையும் சேராத பாரத ராஷ்டிர சமிதி, ஒய்எஸ் ஆர் காங்கிரஸ், பிஜு ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் என மொத்தம் 20 உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு மசோதாவை நிறைவேற்ற 163 வாக்குகள் தேவை. மக்களவையில் மசோதா நிறைவேற்றப் படாத பட்சத்தில், அது மாநிலங்களவையில் எடுத்துக் கொள்ளப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

8. இந்தியாவுக்கு எதிராக சீனாவின் தொடர்ச்சியான தூண்டுதல்கள் மற்றும் அண்டை நாடுகள் மூலம் மேற்கொள்ளும் மூலோபாய முற்றுகை முயற்சிகள் – பகுப்பாய்வு

(i) சீனாவின் பெயர் மாற்றத் தூண்டுதல் (அருணாசலப் பிரதேசம்)

- பரப்பு உரிமைக் கோரிக்கை: சீனா தொடர்ந்து அருணாசலப் பிரதேசத்தை "தெற்கு திபெத்" எனக் கூறி உரிமை கோருகிறது. சமீபத்தில் அந்த மாநிலத்தில் உள்ள ஆறு இடங்களுக்கு புதிய பெயர்கள் சூட்டி தனது கோரிக்கையை வலுப்படுத்தியுள்ளது.
- இந்திய தலைவர்களுக்கு எதிரான எதிர்ப்புகள்: இந்திய தலைவர்கள் அந்த மாநிலத்தைப் பார்வையிடும் போது, சீனா வழக்கமாகத் தூதரக எதிர்ப்புகளை பதிவு செய்கிறது. இதில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் (2009), தலாய் லாமா (2017), குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு (2023), உள்துறை அமைச்சர் அமித் ஷா (2023) ஆகியோரின் பயணங்கள் அடங்கும்.
- 2023 பெயர் மாற்றம்: முக்கியமான விஜயங்கள் மற்றும் G20 கூட்டங்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து, 2023 ஆம் ஆண்டில் சீனா அருணாசலப் பிரதேசத்தில் 11 இடங்களுக்கு பெயர் மாற்றம் செய்தது.
- இந்தியாவின் பதில்: வெளிவிவகார அமைச்சகம் தெளிவுபடுத்தியதாவது, பெயர் மாற்றம் செய்ததால் அந்தப் பகுதிகளின் உண்மை நிலை மாறாது; அவை எப்போதும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தன, இருப்பதும் அதுவே.

(ii) வரலாற்று மற்றும் சமீபத்திய இராணுவ மோதல்கள்

- 1962 போர்: 1962 போருக்குப் பிறகு, எல்லைப் பகுதி பல ஆண்டுகள் ஒப்பீட்டளவில் அமைதியாக இருந்தது.
- கல்வான் பள்ளத்தாக்கு மோதல் (2020): 2020 ஜூன் மாதத்தில், சீனப் படைகள் கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய எல்லைக்குள் நுழைய முயன்றதால் கடுமையான மோதல் ஏற்பட்டது. இதில் 20 இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். சீனா ஆரம்பத்தில் மௌனமாக இருந்தாலும், 2021 பிப்ரவரியில் தங்களது நான்கு வீரர்கள் உயிரிழந்ததாக ஒப்புக்கொண்டது.
- தொடர்ச்சியான பதற்றம்: 2019ல் மாமல்லபுரத்தில் பிரதமர் மோடி மற்றும் சீன தலைவர் சி ஜின்பிங் சந்தித்தபோதும், அதன் பின்னரும் பல சுற்று எல்லை பேச்சுவார்த்தைகள் நடந்தபோதும் பதற்றம் நீடித்து வருகிறது.

(iii) பாகிஸ்தானில் சீனாவின் ஈடுபாடு

சீனா பாகிஸ்தானில் பெருமளவில் முதலீடு செய்து, நிரந்தர பொருளாதார மற்றும் இராணுவ ஆதிக்கத்தை உருவாக்க முயல்கிறது:

- அடிப்படை கட்டமைப்பு திட்டங்கள்: கராக்கோரம் நெடுஞ்சாலை மற்றும் பெஷாவர்–கராச்சி நெடுஞ்சாலை மேம்பாடு.
- கடல் அணுகல்: குவாதர் துறைமுகத்தை மேம்படுத்தி, அரேபியக் கடலுக்கு நேரடி அணுகலைப் பெற்றுள்ளது.
- பொருளாதார வழித்தடம்: மிகப்பெரிய மின்சார மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதி வழங்கி, சீன வர்த்தகத்தை இந்தியப் பெருங்கடலுடன் இணைக்கும் பொருளாதார வழித்தடம் உருவாக்கப்பட்டுள்ளது.

(iv) இலங்கையில் சீனாவின் ஈடுபாடு

இலங்கையில் சீனாவின் முதலீடுகள், இந்தியப் பெருங்கடலில் மூலோபாய ஆதிக்கத்தைப் பெறும் முயற்சியாகக் கருதப்படுகின்றன:

- முக்கிய துறைமுகங்கள்: ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்பு போர்ட் சிட்டி திட்டத்தில் மிகப்பெரிய முதலீடுகள்.
- ஆற்றல் துறை: தீவின் பல பகுதிகளில் ஆற்றல் தொடர்பான திட்டங்களில் முக்கிய முதலீடுகள்.

(v) இந்தியாவின் மீது தாக்கம் மற்றும் எதிர் நடவடிக்கைகள்

- வேகமான உள்கட்டமைப்பு: எல்லைப் பகுதிகளில் விரிவான சாலை வலையமைப்பு உருவாக்கப்பட்டு, முன்பு தனிமைப்படுத்தப்பட்டிருந்த கிராமங்கள் சில மணி நேரங்களில் அணுகக்கூடியதாக மாற்றப்பட்டுள்ளன.
- போக்குவரத்து வசதி: பிரம்மபுத்திரா நதியில் முக்கிய பாலங்கள் கட்டப்பட்டு, கனரக இராணுவ உபகரணங்களை விரைவாக நகர்த்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இராணுவ சுயாதீனம்: தரை நிலைமைக்கு ஏற்ப உடனடி முடிவெடுக்க இந்திய இராணுவத்துக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
- "வைப்ரண்ட் வில்லேஜஸ்" திட்டம்: அருணாசலப் பிரதேசத்தில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், எல்லைக் கிராமங்களை குடியமர்த்தி வளர்த்தல் மூலம் இந்தியாவின் நிரந்தர இருப்பை உறுதி செய்கிறது.

(vi) முடிவுரை

சீனாவின் பெயர் மாற்றத் தூண்டுதல்கள் இந்தியாவின் பரப்பு ஒருமைப்பாட்டை பாதிக்க முயற்சிக்கும் வகையில் உள்ளன. எனவே இந்தியா மௌனமாக இருக்க முடியாது. தூதரக அமைதியை இந்தியா கடைப்பிடித்தாலும், கடுமையான எல்லை கண்காணிப்பு மற்றும் வலுவான பாதுகாப்பு மேம்பாடுகளே இந்தியா தனது நிலப்பரப்பை பாதுகாப்பதற்கான முக்கியமான வழிகளாகும்.

9. 2029 தேர்தலுக்குள் 33% மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் 2026 சட்ட முயற்சி மற்றும் வரலாற்றுப் போராட்டம் – பகுப்பாய்வு

(i) வரலாற்றுச் செய்திகள்

- ஆரம்ப வாக்குரிமை: இந்தியாவில் பெண்களுக்கு 1920ஆம் ஆண்டிலேயே வாக்குரிமை வழங்கப்பட்டது. இது பல மேற்கு நாடுகளை விட முன்னதாகும். அமெரிக்காவில் பெண்கள் முழுமையான வாக்குரிமைக்காக ஆண்களை விட 144 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது; இங்கிலாந்தில் 1928இல் தான் பொதுவான வாக்குரிமை கிடைத்தது.
- உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு: 1987–88ஆம் ஆண்டுகளில் பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு தொடங்கப்பட்டது. 1992ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 73வது மற்றும் 74வது அரசியலமைப்பு திருத்தங்கள், கிராம பஞ்சாயத்துகள் மற்றும் நகராட்சி அமைப்புகளில் 33% இடஒதுக்கீட்டை கட்டாயமாக்கின. தற்போது 21 மாநிலங்கள் இதை 50% ஆக உயர்த்தியுள்ளன.

(ii) மசோதாக்கள் அறிமுகம் – தோல்விகள் மற்றும் 2023 முக்கிய முன்னேற்றம்

- 33% மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா முதன்முதலில் லோக்சபாவில் தேவகௌடா தலைமையிலான அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது; ஆனால் அது நிறைவேறவில்லை.
- மன்மோகன் சிங் தலைமையிலான அரசில், 2010ஆம் ஆண்டு இந்த மசோதா ராஜ்யசபாவில் நிறைவேறியது; ஆனால் லோக்சபாவில் நிறைவேறாததால் அது காலாவதியானது.
- 2023 செப்டம்பரில், மோடி அரசு 106வது அரசியலமைப்பு திருத்தமாக "நாரி சக்தி வந்தன் அதிநியம்" என்ற பெயரில் மசோதாவை நிறைவேற்றியது. இது லோக்சபாவில் 454 வாக்குகளுடன் நிறைவேறி, ராஜ்யசபாவில் ஒருமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

(iii) பிரதிநிதித்துவம் – புள்ளிவிவரப் பகுப்பாய்வு

- 1951: லோக்சபாவில் பெண்களின் பிரதிநிதித்துவம் வெறும் 5% மட்டுமே.
- ராஜ்யசபா: 1951 முதல் 2026 வரை பெண்களின் பங்கு 13% ஐ ஒருபோதும் மீறவில்லை.
- லோக்சபா வளர்ச்சி: 2009க்கு பிறகே பெண்களின் பிரதிநிதித்துவம் இரட்டை இலக்கத்தை எட்டியது.
- அதிகபட்சம்: 2019 லோக்சபாவில் 15% பெண்கள் (வரலாற்றிலேயே அதிகம்); 2014 ராஜ்யசபாவில் 12.7% உச்சம்.
- மாநில சட்டமன்றங்கள்: தற்போதைய சராசரி பெண்கள் பிரதிநிதித்துவம் சுமார் 10% மட்டுமே.

(iv) தற்போதைய நிலை (2026 சிறப்பு அமர்வு)

2029 பொதுத்தேர்தலுக்குள் இந்த இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த மத்திய அரசு 2026 ஏப்ரல் 16 முதல் 18 வரை சிறப்பு பாராளுமன்ற அமர்வை நடத்தியது:

- 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா: இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தவும்,

தொகுதிகள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது.

- லோக்சபா விரிவாக்கம்: மொத்த இடங்கள் 543 இலிருந்து 850 ஆக உயர்த்தும் முன்மொழிவு.
- ஒதுக்கப்பட்ட இடங்கள்: இதில் 272 முதல் 280 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.
- உள் ஒதுக்கீடு: பட்டியல் சாதி (SC) மற்றும் பழங்குடியினர் (ST) பெண்களுக்கும் தனி இடஒதுக்கீடு வழங்கப்படும்.
- மக்கள்தொகை மற்றும் தொகுதி வரையறை: 2034 வரை தாமதிக்காமல் இருக்க, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு தொகுதி மறுவடிவமைப்பு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(v) பிராந்திய அச்சங்களை சமாளித்தல்

- தென் இந்தியா தனது சட்டமன்ற சக்தியை இழக்காது.
- தென் மாநிலங்களின் மொத்த இடங்கள் 129 இலிருந்து 195 ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.
- குறிப்பாக, தமிழ்நாட்டின் லோக்சபா இடங்கள் 39 இலிருந்து 59 ஆக அதிகரிக்கும்.

(vi) முடிவுரை

இன்றைய தேர்தல்களில் பெண்கள் தீர்மானிக்கும் வாக்காளர்களாக மாறியுள்ளனர். இலவச பேருந்து பயணம், சமையல் எரிவாயு போன்ற நலத்திட்டங்கள் பெண்களின் வாக்கு நடத்தையை பெரிதும் பாதிக்கின்றன. எனவே, அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப அரசியல் பிரதிநிதித்துவம் வழங்குவது ஜனநாயக கட்டாயமாக மாறியுள்ளது